**செய்தி வெளியீட்டு எண் 429**
**08.07.2011**

செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் பத்திரப் பதிவுத்துறையின் சீராய்வு கூட்டம் சென்னை பதிவுத்துறைத்தலைவர் அலுவலகத்தில் இன்று 08.07.2011 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

சீராய்வு கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., மற்றும் பதிவுத்துறைத்தலைவர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பதிவுத்துறையின் ஆண்டு வருவாய் மற்றும் வருவாய் வளர்ச்சி விகிதம், முத்திரை தீர்வை மற்றும் பதிவு கட்டண வசூல் நிலுவை இனங்கள் மற்றும் நிலுவைத் தொகை ஆகிய பொருட்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சீராய்வு செய்யப்பட்டது.

அவ்வமயம், கடந்த 2010–11ம் ஆண்டு பதிவுத்துறையின் ஆண்டு வருவாய் ரூ.5020.50 கோடி என்பது குறித்தும், 2011–12ம் ஆண்டில் முதல் காலாண்டில் மட்டும் ரூ.1349 கோடி வருவாய் ஈட்டியுள்ளது குறித்தும் இது சென்ற ஆண்டின் இதே காலகட்டத்தில் ஈட்டிய வருவாயைவிட ரூ.209 கோடி (18.28ரூ) கூடுதலாக அடைந்துள்ளது குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், பதிவுத்துறையின் வருவாயை மேலும் மேம்படுத்தும் சாத்தியக்கூறுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

மேலும் பதிவுத்துறையில் உள்ள 578 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் பிற பதிவு அலுவலகங்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), தனித்துணைஆட்சியர்(முத்திரை) ஆகியோரின் அலுவலக பராமரிப்பு மற்றும் பதிவுத்துறை அலுவலகங்களில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான காத்திருப்பு குடில்கள், சுகாதாரமான குடிநீர்வசதி மற்றும் கழிப்பிட வசதி ஆகியவற்றை உடனடியாக அளிப்பது குறித்தும் விவாதித்தார்கள். மேலும் வாடகை கட்டிடங்களில் செயல்படும் பதிவு அலுவலகங்களில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் இவ்வலுவலகங்களை புதிய அரசு கட்டிடங்களை கட்டி, அரசு கட்டிடங்களுக்கு மாற்றம் செய்வது தொடர்பாகவும் விவாதித்தார்கள்.

மின்னணு தொழில்நுட்ப முறையை முழுமையாக பயன்படுத்தி, பொதுமக்களுக்கான பதிவு சேவையை மேம்படுத்துவதன் அவசியத்தை அறிவுறித்தி, இது தொடர்பாக பதிவுத்துறை அலுவலர்கள் முனைப்புடன் செயல்படவும் கேட்டுக்கொண்டார்கள். மேலும் பதிவுத்துறை பணியாளர்களின் நலன் மற்றும் குறைகளையும் மாண்புமிகு அமைச்சர் திரு.அக்ரி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டறிந்தார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**